# சங்கத்தமிழ்


இதழ் : 15 தை 2016



சிறப்பிதழ்







# "இசைத்தமிழ்"

## கொழும்புத் தமிழ்ச் சங்கம்

விலை ௩00/=

# இசைத்துறையில் பயன்பாட்டு மொழியாகத் தமிழ்


திருமதி. கிருபாசக்தி கருணா
முதுநிலைவிரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்,

## ஆய்வுச் சுருக்கம்

கலை எனும் பெயர்ச்சொல் பல்வேறு அர்த்தங்களையுடையது. ஆயினும், பொதுநிலையில் கலை எனும் சொல் செய்முறை, செய்நேர்த்தி எனும் கருத்துக்களையுடையது. இங்கு நாம் கலைகள் எனும்போது நுண்கலைகளையே கருதுகின்றோம். அதற்கு அழகு, நன்மைசார்ந்த கலைகள் என்ற பொருள் உண்டு. சாதாரண செய்முறைகளிலே காணப்பெறாத, அழகும், நுண்மையும் நுண்கலைகளிலே உண்டு.[1] நுண்கலைகளுள் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை ஆகியன அடங்குகின்றன. இவற்றுள் இசைக்கலை ஒலியின் அடிப்படையில் அமைவது. செவிவழிபுகுந்து இதய நாடிகளைத் தடவி உயிரினங்கள் இசையவும், பொருந்தவும் வைக்கின்றபொழுது இசை ஒலிகள் இசை என்ற பெயரைப் பெறுகின்றன[2]. அரியாலர் தமது "சங்கீதசுதாகரம்" என்ற நூலில் கி. பி. 13ம் நூற்றாண்டு வரை இந்தியா முழுவதும் ஒரே வகையான இசைமுறைதான் வழக்கிலிருந்தன என்று கூறுகின்றோம். இது அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய "தமிழிசை" ஆக இருக்கும் என்பது பல இசையறிஞர்களின் முடிவு.

இசையைப் பாடுதுறை என்றும், இசையியல் என்றும், இருதுறையாகப் பிரிக்கலாம். இசையியல் என்பது கோவையியல், பண்ணியல், ஒத்துஇயல், தாளஇயல், ஆளத்தியியல், கருவியியல், இசைவரலாறு முக்கிய பல்வகை இயல்களைப் பற்றி விளக்குவது. பாடுதுறையில் பாடலாசிரியர்கள் இயற்றிய பாடல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இசையியல் தொடர்பான செய்திகளும், பாடுதுறை தொடர்பானவையும் தமிழிசையாகவே இருந்துள்ளன என்பதற்கு தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, நிகண்டுகள், சிலப்பதிகார உரைகள் மற்றும் காப்பியங்கள் சான்று பகர்கின்றன.

இவற்றிலுள்ள செய்திகளைத் தொகுத்து ஆய்வு செய்து நூல்களைத் தந்தவர்களுள் டாக்டர் வீ. ப. கா. சுந்தரம், முனைவர். இ. அங்கயற்கண்ணி, டாக்டர். மு. ஆபிரகாம் பண்டிதர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அதேபோன்று பாடுதுறைக்கும், தமிழிசை மும்மூர்த்திகள், கோபாலகிருஷ்ண பாரதியார், ஆபிரகாம் பண்டிதர், பாபநாசம்சிவன்



**அறிமுகம்:**

"இசை எனும் சொல் ஒன்றுசேர், பொருந்து எனப் பொருள்படுவது. பண், சுதி, தாளம் பாடலின் சொல், பாடலின் பொருள் இவை ஒன்றோடொன்று பொருந்துவது இசை"[1] இவ் இசையை இரு துறைகளாகப் பிரிக்கலாம். அவற்றைப் பாடுதுறை என்றும் இசைஇயல் துறை என்றும் கூறுதல் வேண்டும்.[2] இந்திய இசை கருநாடக இசை என்றும் இந்துஸ்தானி இசை என்றும் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கருநாடக இசை என்பதிலுள்ள "கருநாடகம்" என்ற சொல் மிகப் பழமையானது என்பதும், அது பண்டைய தமிழர் வளர்த்த தமிழக இசையே என்பதும் ஆராய்ச்சியாளர்களின் துணிபு[3]. மனித வாழ்வின் வெற்றிக்கு அடிப்படையாக உள்ளது கல்வி ஆகும். இக்கல்வி முறைகளில் இசைக்கல்வி பற்றி அறிவு இன்று தொலைக்காட்சி, வானொலி, இசைத்தட்டுக்கள், ஒலிநாடாக்கள், இசைக்குறியீடு கொண்ட நூல்கள் ஆகியவற்றின் மூலம் மக்களிடையே நன்கு பரவி வருகின்றது. இசையின் முக்கியத் துவம் இன்று பல உலக நாடுகளில் உணரப்பட்டு இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் இசைப் பள்ளிப் பாடத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது.

**இசைக்கல்வி:**

ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கு ஒரு கற்பித்தல் ஊடகமாகவும், மாணவர்களுக்கு சிறந்த கற்றலுக்கேற்ற வழிகாட்டியாகவும் உள்ள இவை, கல்வித்திட்டத்தில் பின்வரும் முறையில் விரிவுபடுத்தப்படு கின்றது.

1. பாடசாலைகளில் இசைக்கல்வி
2. பல்கலைக்கழகங்களில் இசைக்கல்வி
3. பல்கலைக்கழகங்களில் பட்ட மேற் படிப்பில் இசைக்கல்வி

**பாடசாலைகளில் இசைக்கல்வி :**

மனிதருள் பல வேறுபாடுகள் இருந் தாலும், அவர்களுக்கு இருக்கக்கூடிய ரசனை உணர்வு வித்தியாசமற்றது. இந்த

ரசனை உணர்வை வித்தியாசமான முறையிலே பயன்படுத்தி வளர்த்தெடுப்பது மிக முக்கியமாகும். ஒருவனுடைய ரசனை நல்வழியிலும், தீயவழியிலும் செல்வதற்குச் சாத்தியங்கள் உள்ளன. எனவே அவனில் இருக்கக்கூடிய ரசனை உணர்வை நல்ல ஆன்மீகக் கலைகள் மூலமாகவும், நல்ல கலாசார விழுமியங்கள் மூலமாகவும் வெளிக்கொணர வேண்டியது அவசியமாகின்றது. இக்கொள்கைக்கிணங்க பல நாடுகள் பாடசாலைக் கலைத்திட்டத்தில் அழகியற்கல்வியை நெறிப்படுத்தியுள்ளன.

**பல்கலைக்கழகங்களில் இசைக்கல்வி :**

பாடசாலைகளில் அடிப்படை இசைக் கல்வியைப் பயின்ற மாணவன் இன்று பல்கலைக்கழகங்களிலும் சென்று தனது இசைப்படிப்பை மேற்கொள்ளப் பல வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இசைக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்தியாவில் இசைக்கல்வி அளிக்கப்படும் அரசு அங்கீகாரம் கொண்ட சில பல்கலைக்கழகங்கள். **பீ. ஏ. இசை**

1. சென்னைப் பல்கலைக்கழகம்

2. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

**இலங்கையிலும் இசைப்பட்டப்படிப்புக்கள் தொடங்கப்பட்டுள்ளன.**

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

2. கிழக்குப் பல்கலைக்கழகம் (மட்டக் களப்பு)

3. கொழும்பு பல்கலைக்கழகம்

**பல்கலைக்கழகங்களில் பட்டமேற்படிப்பில் இசைக்கல்வி :**

கல்வித்துறையில் இன்று மற்றத் துறைகள் வளர்ச்சியடைந்து வருவதுபோல் இசைத்துறையிலும் பல வகையாலும் வளர்ச்சியடைந்து வருகின்றது. இசை தோன்றி வளர்ந்த இந்தியாவிலேயே இசைக்கல்விக்குரிய பட்ட மேற்படிப்பு வாய்ப்புக்களும், வளங்களும் நிறைய ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் மற்றைய நாடுகளிலிருந்து மாணவர்கள் தம் மேற்படிப்புக்களைத் தொடருவதற்காக இந்தியாவிற்கு வந்து கொண்டிருக்கின்றனர். மேற்படிப்புக் கற்கை நெறிகள் உள்ள இந்தியாவின் சில பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழங்கங்களுக்கு உட்பட்ட கல்வி நிறுவனங்கள் கீழே எடுத்துக்காட்டிற்காகத் தரப்படுகின்றன.

**முதுகலை இசை :**

சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஸ்ரீ சத்குரு சங்கீத வித்தியாலயம், மதுரை

சீதாலட்சுமி இராமசாமிக் கல்லூரி, (தன்னாட்சி), திருச்சி

இராணி மேரிக் கல்லூரி, சென்னை (தன்னாட்சி)

**ஆய்வியல் நிறைஞர் இசை (M. Phil Music)**

சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

**முனைவர் பட்ட ஆய்வுநெறி (Ph. D)**

சென்னைப் பல்கலைக்கழகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

**தேவார இசைக்கலைமணி** (மூன்றாண்டு பட்டயப் படிப்பு – சிதம்பரம் அண்ணா மலைப் பல்கலைக்கழகம்)

சென்னைப் பல்கலைக்கழகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

**இசைக்கலைமணி** (மூன்றாண்டு படிப்பு)

சென்னை அரசு இசைக்கல்லூரி
கோவை அரசு இசைக்கல்லூரி
மதுரை இசைக்கல்லூரி
திருவையாறு அரசு இசைக்கல்லூரி
சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
திருச்சி கலைக்காவிரி (நிகர்நிலை)
**மூன்றாண்டு சான்றிதழ் படிப்பு** நாதசுரம், தவில், குரலிசை, நாட்டியம், தேவாரம்)

மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்
திருச்சி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, சேலம், திருவாரூர், கரூர், ஈரோடு, தூத்துக் குடி, சிவகங்கை, இராமநாதபுரம், விழுப் புரம், கடலூர், சீர்காழி, திருவண்ணாமரை, காஞ்சீபுரம், பெரம்பலூர், கிருஷ்ணகிரி)

**இசைத்துறையில் பயன்பாட்டு மொழியாகத் தமிழ் :**

மேற்கூறப்பட்ட இசைக்கல்லூரிகளிலும், இசைப்பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் இசை கற்பிக்கப்படுகின்றது. இவ் இசையை இசையியல் துறையாகவும், பாடுதுறையாகவும் பிரித்து நோக்கலாம்.

**இசையியல் துறை :**

இசையின் இலக்கணம், வரலாறு கூறுவதே இசையியல் எனப்படுகிறது. (கோவையியல், பண்ணியல், தாளவியல், கொட்டு முழக்கியல், இசைக்கருவிகளின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, இசைப் பெரியார்களின் வரலாறு அனைத்தும் அடங்கியதே "இசையியல்" ஆகும்.) இது பற்றிய கருத்துக்களை வீ. ப. கா. சுந்தரம் அவர்களின் தமிழிசைவகை என்ற நூலை ஆதாரமாக வைத்தே கூறப்படுகின்றது.

சென்ற பல நூற்றாண்டுகளாக இசைத்துறையில் வடசொற்கள் மிகவும் வளர்ந்தோங்கி, தமிழிசைத்துறைச்


ஆபிரகாம் பண்டிதர்


சுவாமி விபுலானந்தர்


எம்.எம். தண்டபாணி தேசிகர்

சொற்களை அழியச் செய்துவிட்டன. இவ்வாறான இசைத்துறைவிரிவுரைகளில் நாளாந்தம் பயன்பாட்டில் இருக்க வேண்டிய சில தமிழ்ப்பதங்களை பின்வரும் தலைப்புக்களில் நோக்கலாம்.

கோவையியல்
ஒத்து இயல்
பண்ணியல்
தேவார இசையியல்
ஆளத்தியில்

**கோவையியல் :**

1. சுவரம் :- சுவரம் எனும் சொல்லுக்கு தமிழிசையில் கோவை, கேள்வி, கோல், தந்திரி, நரம்பு, தந்தி எனப்பல சொற்கள் வழக்கில் இருந்தன.

இவற்றுள்ளே கோவை எனும் சொல் பெரிதும் பொருத்தமானது. இதன் காரணமாக கோவை எனும் சொல்லைப் பற்றிப் பார்க்கலாம்.

கோவை :- குரல் ஒலியை அடிப்படை யாகக் கொண்டு (ஆதார சட்ச ஒலியை) பிற இசை நரம்பொலிகள் சேர்க்கப்படு வதால் கோவை எனப் பெயர் பெற்றது. 'கோ' எனும் சொல் இணை, சேர் என்ற பொருளை உடையது. 'கோ' என்பது பகுதியாதலால் ''கோவை'' என்பதுவே ஏற்றற்குரிய வடிவம்.

2. சுவரங்கள் ஏழு :

*ச, ரி, க, ம, ப, த, நி*
*கு, து, கை, உ, இ, வி, தா*

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் பெயர்கள் தமிழ்ப் பெயர்கள். இவற்றுக்குரிய எழுத்துக்களாக ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனும் உயிர் எழுத்துக்கள் பண்டைத் தமிழிசையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவையே பின்னர் சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று வடமொழியில் கூறப்பட்டு சரிகமபதநி என வழக்கில் வந்தன. இவை 12 சுரவரிசைகளாக மாறும் விதத்தைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

வ.எண் சுரம் சுரவகைகளின் பெயர் தமிழில் சுரவகைகளின் பெயர் வடமொழியில் குறியீடு

*1. குரல் - - ஸ*
*2. துத்தம் குறை துத்தம் சுத்த ரிஷபம் ரி 1*
*3. துத்தம் நிறை துத்தம் சதுஸ்ருதி ரிஷபம் ரி 2*
*4. கைக்கிளை குறை கைக்கிளை சாதாரண காந்தாரம் க 1*
*5. கைக்கிளை நிறை கைக்கிளை அந்தர காந்தாரம் க 2*
*6. உழை குறை உழை சு த ் த மத்தியமம் ம 1*
*7. உழை நிறை உழை பி ர தி மத்தியமம் ம 2*
*8. இளி - - ப*
*9. விளரி குறை விளரி சுத்த தைவதம் த 1*
*10. விளரி நிறை விளரி சதுசுருதி தைவதம் த 2*
*11. தாரம் குறை தாரம் கைசிகி நிஷாதம் நி 1*
*12. தாரம் நிறை தாரம் காகலி நிஷாதம் நி 2*

சிலநூல்களில் நிறை, குறை என்பதற்குப் பதிலாக மென், வன் எனும்

சொற்கள் பாவிக்கப்பட்டுள்ளன. வட்மொழியில் இவை கோமள, தீவிர எனும் சொற்களால் அழைக்கப்படுகின்றன.

3. ஆரோகணம் :- கோவைகள் முதற் கோவையினின்றும் தொடர்புற்று ஒரு குறித்த அளவில் உயர்ந்து செல்வதால், ஏறுநிரல் எனப்பட்டது.

4. அவரோகணம் :- கோவைகள் முதற் கோவையினின்றும் படிப்படியாகக் குறைந்து வருதல் அவரோகணம் எனப்படும்.

5. ஸ்தாயி : ஸ்தாயிக்குரிய தமிழ்ப்பெயர் மண்டிலமாகும்.
மண்டிலம் மூன்று வகைப்படும்.

1. மந்திரஸ்தாயி – மெலிவு மண்டிலம்
2. மத்தியஸ்தாயி – சமன் மண்டிலம்
3. தாரஸ்தாயி – வலிவு மண்டிலம்
6. பூர்வாங்கம், உத்தராங்கம் :

கோவைகளின் பூர்வாங்கம் என்பது முன்னர் பாவத்தையும், உத்தராங்கம் என்பது பின்னர் பாவத்தையும் குறிக்கப் பயன்பட்டுள்ளது.

7. கோவைப்பயிற்சி வகைகள் : அடுத்த தாக கோவைப்பயிற்சி வகைகளும், அவற்றின் தமிழ்ப்பெயர்களும் கீழ்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1) | சுவராவளி வரிசை | - | பயில் கோவை நிரல் |
| 2) | மேல்ஸ்தாயி வரிசை | - | வலிவு மண்டில வரிசை |
| 3) | மந்தர ஸ்தாயி வரிசை | - | மெலிவு மண்டில வரிசை |
| 4) | ஜண்டை வரிசை | - | இரட்டைஅடுக்கு |
| 5) | தாட்டு வரிசை | - | தாண்டு வரிசை |
| 6) | அலங்காரம் | - | அணி அடுக்கு |

**ஒத்து இயல் :**
**ஒத்து :**

அனைத்துக் கோவைகளையும் அவ்வகைகளுக்குரிய அளவில் ஒத்து ஒலிக்கச் செய்வதற்கு அடிப்படையாக நிற்கும் ஒலியாதலால் "ஒத்து" எனப் பெயர் பெற்றது. அனைத்துக் கோவைகளையும் ஒத்து ஒலிக்கச் செய்வது ஆதலாலும், "ஒத்து" என்ற பெயர் ஏற்பட்டது. அடிப்படைக் குரலாகப் பயன்படும் இவ் ஒத்து வடமொழியில் "சுருதி" என்று அழைக்கப்படுகிறது.

**ஒத்து வகை :**
பஞ்சம சுருதி என்றும், மத்திம சுருதி என்று இருவகை ஒத்துக்கள் உண்டு.

**பஞ்சம சுருதி :**
இவ்வகைச் சுருதியில் பஞ்சமத்தைக் குரலாகக் கொள்ளாமல் ஆதார சட்சமமே ஒத்துச் சுரமாக நிற்கிறது. சட்சத்துடன் இணைந்து பஞ்சமம் ஒலிக்கும் ஒத்துவகை என்பதால் இப் பெயர் ஏற்பட்டுள்ளது.

**மத்திம சுருதி :**
இதில் மத்திமம் அடிப்படை ஒத்து சுரமாக நிற்பதாலும், மத்திமத்தைக் குரலாகக் கொள்ளுவதாலும், மத்திமசுருதி எனப்பட்டது.

**பண்ணியல் :**
**பண் :**

ஏறுநிரலிலும், இறங்கு நிரலிலும் தனக்குரிய கோவை வரிசைகளைக் கொண்டு தோன்றக் கமகங்கள் ததும்பக் கோவைகளை வளர்த்துப் பாடப்படுவதே பண். இவ்வாறு இசைத்துப் பண்ணப்படுவ தால் "பண்" எனப் பெயர் பெற்றது.

**ஆளத்தி / பண்விருத்தி :**

பண்ணை விருத்திப் பாடுவதை பண்விருத்தி அல்லது ஆளத்தி எனப்படுகிறது. இது பண்ணை வளர்த்து அளித்துப் பாடுவதைக் குறிக்கும். ஆலாபனம், ஆளத்தி, பண்விருத்தி என்பன ஒரு பொருள் தரும் சிறந்த தமிழ்ச் சொற்கள்.

**பண் வகை :**

பெரும்பண் : ஏறு இறங்கு நிரல்களின் ஏழுகோவைகள் மாறாமல் வரப்பெற்ற முழுமைப்பண்ணே பெரும்பண் எனப்பட்டது. இதனைத் தாய்ப்பண், தலைமைப்பண் எனவும் அழைத்தனர். இதுவே வடமொழியில் ஜனக இராகம், மேளகர்த்தா இராகம், சம்பூர்ண இராகம் என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது.

**பண்ணியம் :**

இது ஏறு இறங்கு நிரல்களில் மாறாமல் 6 கோவைகளை உடையது. இது வடமொழியில் சாடவ இராகம் எனப்படுகிறது.

**நிறம் :**

இது ஏறு இறங்கு நிரல்களில் மாறாமல் 5 கோவைகளை உடையது. இது வடமொழியில் ஔடவ இராகம் என்பர்.

**திறத்திறம் :**

இது ஏறு இறங்கு நிரல்களில் மாறாமல் நான்கு கோவைகளை உடையது. இது வடமொழியில் சதுர்த்த இராகம் என்பர்.

**பண் இலக்கணத்தோடு தொடர்புடைய சில தமிழ்ச்சொற்களும், வடசொற்களும்**

| இல. | தமிழ்ச்சொற்கள் | வடசொற்கள் |
|---|---|---|
| 1. | ஏறுநிரல் | ஆரோகணம் |
| 2. | இறங்குநிரல் | அவரோகணம் |
| 3. | பண் வகை | ராக வகை |
| 4. | சினைப் பண் | ஜன்னிய ராகம் |
| 5. | பண்திறக் கோவை | இராகச்சாயாஸ்வரம் |
| 6. | கிழமைக் கோவை | ஜீவஸ்வரம் |
| 7. | இடைபிறவரவுக் கோவை | அந்நியஸ்வரம் |
| 8. | இடைபிற வரவுப்பண் | பாஷாங்க இராகம் |
| 9. | உரிமைக் கோவை | ஸ்வகீய ஸ்வரம் |
| 10. | ஒரு உப்பண் | வர்ஜ ராகம் |
| 11. | பிறழ்ச்சிப்பண் | வக்ர ராகம் |

**தேவார இசையியல் :**

**தேவாரம் :**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய பாடல்கள் தேவார தொகுப்பிற்குள் அடங்குகிறது.

கர்நாடக சங்கீதம், இந்துஸ்தானி சங்கீதம் என்னும் பகுப்பு நேரும் காலத்திற்கு முந்தித் தோன்றியவை தேவாரப் பாடல்கள் ஆகையால், தேவாரம் பற்றிய செய்திகள் தமிழிசையில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

**தலமுறை :**

திருப்பதிகங்கள் பாடப்பெற்ற கோயில்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட முறை தலமுறை எனப்பட்டது.

**பண்முறை :**

திருப்பதிகங்கள் பண்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட முறை பண்முறை எனப்பட்டது.

**பண்களும் காலமும் :**

சங்க இலக்கிய காலத்திலே பண்ணுக்குக் காலம் குறிக்கும்முறை தோன்றியது. ஆண்டுக் காலத்தைப் பெரும் பொழுது

களாகப் பகுத்தனர். காரே, கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதவேனில் என ஒரு ஆண்டின் ஆறு பெரும் பொழுது களையும், முற்பகல், பிற்பகல், நடுப்பகல், முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு என ஒரு நாளின் ஆறு சிறு பொழுதுகளையும், பகுத்தபோது சங்ககாலத்திலேயே பண்ணின் காலமுறை தோற்றம் பெற்றது. இவை இன்றுவரை பல மாற்றங்களுடன் வளர்ந்து வந்து பகல் பண்கள், இரவுப் பண்கள், பொதுப்பண்கள் என்ற வகைப்பாடுகளுடன் நடைமுறையில் பயன்பாட்டில் உள்ளன.

**ஒன்பான் சந்திக்கும் பண்கள் :**

கோயில் வழிபாட்டில் ஆலய மகோற்சவங்களிலும், சாமி ஊரில் உலாவரும்போதும், ஒன்பது சந்திகளிலும் பண்கள் பாடும்முறை தொன்றுதொட்டு வழக்கிலிருந்து வருகிறது. இவை இன்று நவசந்திப் பண்கள் என அழைக்கப் படுகின்றன. இப்பண்கள் தேவாரத்தில் இடம்பெற்றுள்ளன. ஒன்பான் சந்திக்கும் உரிய பண்களும், கடவுளர்களும் கீழ் வருமாறு :

**சந்தி பண் கடவுள்**

1. நடு / ஊர்நடு பஞ்சமம் / மேகராகக் குறிஞ்சி பிரம்மா
2. கிழக்கு காந்தாரம் இந்திரன்
3. தென்கிழக்கு கொல்லி அக்னி
4. தெற்கு கௌசிகம் யமன்
5. தென்மேற்கு நட்டபாடை நிருதி
6. மேற்கு சீகாமரம் வருணன்
7. வடமேற்கு தக்கேசி வாயு
8. வடக்கு தக்கை, தக்கேசி குபேரன்
9. தென்கிழக்கு சாளரபாணி / பஞ்சமம் ஈசுவரன்

**பாடுதுறை :**

இசைக்கு மொழியில்லை என்று சொல்லப்படுகின்ற ஒரு மரபு காணப் படுகிறது. இதன் கருத்து, மொழி தேவை யில்லை என்பதல்ல. அதாவது எந்த மொழி யிலும் இசை பாடலாம் என்பதாகும். எவ்வாறாயினும் மொழி தெரியாமல், பொருள் விளங்காமல் பாடும்போது உச்சரிப் புக்களில், கருத்துக்களில் தவறுகள் நேரிடச் சாத்தியங்கள் பலவுண்டு.

புரந்தரதாசர் ஆரம்ப வரிசைகளை சரிகமபதநி எனும் ஏழு கோவைகளை அடிப்படையாக வைத்து இயற்றியுள்ளார். இவற்றுடன் பல மொழிகளில் பல்வகை உருப்படிகள் பல வாக்கேயக்காரர்களினால் இயற்றப்பட்டுள்ளது. கீதத்திலிருந்து கிருதிகள் வரை அனைத்து உருப்படிகளும் தமிழிலும் இயற்றப்பட்டுள்ளன.

கீதத்திலிருந்து ஒவ்வொரு உருப் படிகளும் வடமொழி நூல்களிலிருந்துதான் வந்தன என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் அனைத்து பாடல் வகைகளும், தமிழிலே இயற்றப்பட்டுள்ளதால் பாடல்கள் இயற்று வதிலும், அவற்றை அச்சில் வெளியிடு வதிலும், பாதுகாப்பாகப் பேணுவதிலும் மிகுந்த சிரத்தை எடுத்து அரிய பணி ஆற்றியவர் அண்ணாமலை அரசர்.

ஆபிரகாம் பண்டிதர், பெரியசாமிதூரன், கோடீசுவரஐயர், தஞ்சை நால்வர், பாபநாசம்சிவன், தமிழிசை மும்மூர்த்திகள், கோபாலகிருஷ்ண பாரதியார், வேதநாயகம் பிள்ளை, இராமலிங்க அடிகளார், நீலகண்ட சிவன் போன்றோர் தமிழ்மொழியில் சிறந்த தரமான பாடல்களை இயற்றித்தந்துள் ளனர்.



**முடிவுரை :**

13ம் நூற்றாண்டுக்குப் பின் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகள் பேசும் தென்னிந்திய மக்களிடையே மரபு இசையாகப் பாடப்பட்டு வரும் கருநாடக இசைக்குத் தாய் பண்டைத் தமிழிசையே என்பதும், இந்த இசை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பல மாற்றங்களுடன் தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது என்பது ஆய்வாளர்களின் ஒருமித்த கருத்தாகும். இசைத்துறைசார்ந்த கலைச்சொற்களும், இசைப்பாடல்களும் முதன்முதலாகத் தமிழிலேயே தோற்றம் பெற்றிருக்கும் என்பது இதனூடு தெளிவாகப் புலப்படுகின்றது. இன்று பல மாற்றங்கள் ஏற்பட்டு இசைத்துறையில் வேறு மொழிகள் கலப்பு ஏற்பட்டாலும், வகுப்பறையில் இசையியல் சார்ந்த கற்பித்தலிலும், செயன்முறை சார்ந்த கற்பித்தலிலும், இசை ஆற்றுகைகளிலும் பயன்பாட்டு மொழியாகத் தமிழை மட்டும் பிரயோகிக்கலாம் என்பது இவ் ஆய்வுக் கட்டுரையின் முடிவாகும்.

**உசாத்துணை நூல்கள் :**

*1) சிவத்தம்பி. கா, **"தமிழர் கலைகள்"**, 2007, குமரன் அச்சகம், அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம், சுவிற்சலாந்து, ப. 2.*

*2) சுப்பிரமணியன். ச. வே, **"தமிழர் தோற்கருவிகள்"**, (முன்னுரை), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980, ப. v.*